









We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## SEPTEMBER

We Are Here..!! To Guide You..!!









# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## செப்டம்பர் - 07.09.2018

We Shine Academy™
guiding you to get through

Main Office @
**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**Weshine Study Circle**

A-90, 3rd Street (Near K3 Police Station),
Annanagar East
Chennai, Tamil Nadu 600102.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamilnadu 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- தமிழக நிகழ்வுகள்
- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- விருதுகள்


We Shine Academy™

## தமிழக நிகழ்வுகள்

- தமிழ்நாட்டின் **13 கடலோர மாவட்டங்**களையும் தீவுகளையும் உள்ளடக்கிய கடல்சார் சூழலைப் பாதுகாப்பதற்காக, தமிழ்நாடு அரசு, கடலோர மண்டல மேலாண்மை திட்டத்தின் (**Coastal zone Management**) இறுதி வரைவை மத்திய சுற்றுச்சூழல் வனங்கள் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்திடம் சமர்ப்பித்துள்ளது.
  - இதில், தமிழக கடற்கரையை 6 பிரிவுகளாக பிரித்துள்ளது.
  - அவை **CRZ IA, CRZ IB, CRZ II, CRZ III, CRZ IV A மற்றும் CRZ IV B** எனப் பெயரிடப்பட்டுள்ளது.
- **குறிப்பு**
  - தமிழகத்தில் மன்னார் வளைகுடா கடல்சார் தேசிய பூங்கா, தூத்துக்குடி மற்றும் தனுஷ்கோடிக்கு இடையே அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## இந்திய நிகழ்வுகள்

- **அலுவல் பணியில் ஹிந்தி மொழியை** செயல்படுத்துவது தொடர்பான செயல்பாட்டையும் சிக்கல்களையும் பற்றி விவாதிக்க அலுவல் மொழித்துறையின் **முதல் சீராய்வுக் கூட்டம் உள்துறை அமைச்சர் ராஜ் நாத் சிங் தலைமையில் நடைபெற்றது**.
- **குறிப்பு**
  - கந்தஸ்த் - கணினி மென்பொருள் - அனைத்து வகையான அலுவல் கோப்புகளை ஆங்கிலத்தில் இருந்து ஹிந்திக்கும், ஹிந்தியில் இருந்து ஆங்கிலத்திலும் மொழிப்பெயர்ப்பதற்காக அலுவல் மொழித்துறை உருவாக்கியுள்ளது.

- சுனாமி பேரிடர் ஒத்திகை மற்றும் மீட்பு நடடிவடிக்கை – 2018 (**Iowave 18 – Indian Ocean wave Exercise**) இந்தியா முழுவதும் உள்ள கடலோர பகுதிகளில் செப்டம்பர் **4-5 தேதிகளில் சுனாமி பேரிடர் ஒத்திகை மற்றும் நடவடிக்கை** மேற்கொள்ளப்பட்டது.
  - இந்தியா மற்றும் 23 நாடுகள் இணைந்து இந்த சுனாமி பேரிடர் ஒத்திகை மற்றும் மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டன. ஐ.நா அமைப்பின் யுனெஸ்கோ சர்வதேச அரசாங்க கடற்சார் ஆணையம் (**IOC – Inter governmental Oceanographic commission**) மற்றும் இந்திய பெருங்கடல் சுனாமி எச்சரிக்கை

மற்றும் மட்டுப்படுத்தும் அமைப்பு (**IOTWMS – Indian Ocean Tsunami weaning Mitigation System**) ஒருங்கிணைந்து இந்த நடவடிக்கையை மேற்கொண்டன.

- **இந்தியா மற்றும் அமெரிக்கா** நாடுகளுக்கிடையேயான பாதுகாப்புத் துறை சம்பந்தமான **டூ ப்ளஸ் டூ** பேச்சுவார்த்தை **டெல்லியில் நடைபெற்றது.**
  - இதில் அமெரிக்க வெளியுறவுத் துறைச் செயலாளர் மைக்பாம்பியோ, அமெரிக்க பாதுகாப்புத் துறை செயலாளர் ஜேம்ஸ் மாட்டிஸ் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் மற்றும் இந்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.
  - இந்த டூ ப்ளஸ் டூ பேச்சுவார்த்தையில், இரு நாட்டுத் தொடர்பு மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றிற்கான கோம்காஸா(**COMCASA – Communications Compatibility and Security Agreement**) ஒப்பந்தம் கையெழுத்தானது.
- **குறிப்பு**
  - இவ்வொப்பந்தத்தின் மூலம் இராணுவம் சார்ந்த முக்கிய தொழில்நுட்பங்களை அமெரிக்காவிடம் இருந்து இந்தியா பெற்றுக் கொள்ளவும் அமெரிக்கா மற்றும் இந்திய இராணுவத்துக்கு இடையே தகவல் தொடர்பு வசதிகள் அமைக்கவும் முடிவு செய்துள்ளது
  - அமெரிக்காவிற்கு **Major Defence partner** என்னும் அந்தஸ்தை 2016ல் கொடுத்தது குறிப்பிடத்தக்கது.

- **ஆசிய அளவில் அலுவலக வாடகையில்** அதிக பயன்பெற்ற நகரங்களின் பட்டியலில் **இந்தியாவின் பெங்களுரு நகரம் முதலிடம்** பிடித்துள்ளது. பெங்களுரில் ஏப்ரல் - ஜுன் காலாண்டில் அலுவலக வாடகை **7 சதவீதம் வளர்ச்சியைக் கண்டுள்ளது**.
  - பெங்களுருவைத் தொடர்ந்து 5.5 சதவீகித உயர்வுடன் ஜப்பானின் **டோக்கியோ நகரம் 2வது** இடத்திலும், ஆஸ்திரேலியாவின் **மெல்போர்ன் 3வது** இடத்திலும் உள்ளது.

## உலக நிகழ்வுகள்

- ஜப்பான் நாட்டின் மேற்குப் பகுதியில் **‘ஜெபி’** என்ற புயல் மிகப் பெரிய சேதங்களை ஏற்படுத்தியுள்ளது. இந்த புயல் மிகக்

கடுமையான புயலாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.
  - ஜெபி(**Typhoon Jebi**) புயலுக்கு தென்கொரியா இந்த பெயரை வைத்துள்ளது. ஜெபி என்றால் **கொரிய மொழியில் விழுங்கு** என்று பொருள்.

- விண்வெளித் துறையில் **இந்தியா, பிரான்ஸ்** நாடுகளுக்கிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. மேலும் விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பும் திட்டத்தில் இணைந்து செயல்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளனர்
- **குறிப்பு**
  - சுகன்யா திட்டத்தின் கீழ், வரும் 2022ம் ஆண்டுக்குள் விண்வெளிக்கு மனிதனை அனுப்பும் திட்டத்தை நிறைவேற்ற மத்திய அரசானது முடிவு செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## விளையாட்டு நிகழ்வுகள்

- தென்கொரியாவின் **சாங்வான் நகரில்** நடைபெற்று வரும் 52வது சர்வதேச துப்பாக்கிச்சுடுதல் சாம்பியன்ஷிப் போட்டியில், ஆண்கள் **10 மீட்டர் ஏர் பிஸ்டல்** பிரிவில் **இந்தியாவின் சவுரப் சவுத்ரி தங்கப்பதக்கம்** வென்றுள்ளார்.
- **குறிப்பு**
  - இந்தியாவின் அர்ஜுன் சிங் சீமா இதே பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்றது குறிப்பிடத்தக்கது.

## விருதுகள்

- டிஜிட்டல் பத்திரிக்கை யுகத்தில், அமெரிக்காவின் ஜார்ஜியா மாகாணத்தில் **NRI Pulse** என்ற பத்திரிக்கையை நடத்திய முதல் இந்திய பெண் என்ற பெருமையை **வீணா ராவ்** என்ற பெண்மணி பெற்றுள்ளார்.
  - இவர் **லிம்கா உலக சாதனைப் புத்தகத்தில் இடம்** பெற்றுள்ளார்.